மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவையாறு

முன்னிலை: திரு.ப.இரமேஷ் பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி திருவையாறு

2026–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 25–ஆம் நாள் வியாழக்கிழமை

அசல் வழக்கு எண்.11/2015
CNR No.TNTJ15–000002–2015

அ.ஜூலியட் — வாதி

/எதிராக/

இமாகுலேட் இருதய மேரி தேவாலயம்,
அதன் பங்குத்தந்தை ஏ. பிரான்சிஸ் மூலம் — பிரதிவாதி

(இ.ம.எண்.449/2025–ல் கடந்த 20.08.2025 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி வழக்குரை திருத்தம் செய்யப்பட்டுள்ளது)

வழக்கறிஞர்கள் முன்னிலை

வாதிக்காக	:	திரு.D.சாமிநாதன்
பிரதிவாதிக்காக	:	திரு.S.விஸ்வநாதன்

தீர்ப்புரை

பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கேட்டு அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) திருத்தப்பட்ட வழக்குரை சுருக்கம்:

1.1) வழக்கு சொத்தானது சர்வே எண்.549/3B மற்றும் 0.01.17 ஏர்ஸ் பரப்பளவு கொண்ட மங்களூர் ஓடு வேய்ந்த வீடு மற்றும் நத்தம் காலி மனை

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.25 19:40:40 +0530

ஆகும். மேற்படி வழக்கு சொத்தானது முதலில் தர்மபுர ஆதினத்திலுள்ள ஸ்ரீ பஞ்சநதீஸ்வர சுவாமி தேவஸ்தானத்திற்கு சொந்தமாக இருந்தது. ஆரம்பத்தில் மேற்படி வழக்கு சொத்து பஞ்சநதீஸ்வர சுவாமி தேவஸ்தானத்தால் பஞ்சநதம்பிள்ளை என்பவருக்கு குத்தகைக்கு விடப்பட்டது. மேற்படி வழக்கு சொத்தை பஞ்சநதம்பிள்ளை என்பவர் டாக்டர்.ஞானதுரைக்கு உள்குத்தகைக்குவிட்டார். மேலும் ஞானதுரை சிறிது காலம் அங்கு அவரது மருத்துவமனையை நடத்திவந்தார். சுமார் 40 வருடங்களுக்கு முன்பு டாக்டர்.ஞானதுரை வழக்கு சொத்தை வாதியின் கணவர் அருளானந்தம் என்பவருக்கு வாய்மொழி ஒப்பந்தத்தின் மூலம் உள்குத்தகைக்குவிட்டார். மேற்படி அருளானந்தம் பஞ்சநதீஸ்வர சுவாமி தேவஸ்தானத்தின் குத்தகைதாரராக அங்கீகரிக்கப்பட்டு 07.06.2007 அன்று அவர் இறக்கும் வரை அவரிடமிருந்து வாடகையை பெற்றுவந்தது.

1.2) தாவா வீட்டிற்கு வீட்டு வரி வாதியின் கணவர் அருளானந்தம் பெயரில் விதிக்கப்பட்டு, அவரது பெயரில் வீட்டு வரியை செலுத்தி வருகிறார். வழக்கு சொத்தானது பிரதிவாதியின் தேவாலயத்திற்கு தெற்கே அமைந்துள்ளது மற்றும் வாதியின் குடும்ப உறுப்பினர்கள் அந்த தேவாலயத்தின் உறுப்பினர்களாக உள்ளனர். பிரதிவாதி தேவாலயத்தின் பங்குதந்தையாக இருந்த செல்வராஜ் என்பவர் கடந்த 2004-ல் உயர்சமூகத்தை சேர்ந்த கிறிஸ்தவர்களின் தூண்டுதலின் பேரில் பட்டியல் சமுதாயத்தை சேர்ந்த, வாதியின் கணவரை தேவாலய திருவிழா காலங்களிலும் பிரார்த்தனை நேரத்திலும், தேரோட்டம் உள்ளிட்ட பண்டிகைகளின் போதும் சாதியை காரணம் காட்டி இழிவாக நடத்தி வந்தார்.

1.3) அதை தட்டிக்கேட்டதால் பங்குபேரவையை கூட்டி வாதியின் குடும்பத்தை தாவா சொத்திலிருந்து வெளியேற்ற தீர்மானம் நிறைவேற்றி

PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.25 19:41:05 +0530

அதற்கு ஒரு பங்கு உறுப்பினர்கள் கொண்ட குழுவை ஏற்படுத்தினார். அந்த குழுவிற்கு சார்லஸ் என்பவரை தலைவராக நியமித்தார். மேற்படி பங்குதந்தை அறிவுரைப்படி மேற்படி சார்லஸ் அடியாட்கள் துணையோடு வாதியின் குடும்பத்தை தாவா சொத்திலிருந்து வெளியேற்ற முயற்சித்தார். அதனால் வாதியின் கணவர் மேற்படி தேவாலய பங்குத்தந்தை நியமித்த குழுவின் தலைவர் சார்லஸ் மீது இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.70/2006 என்ற வழக்கை தாக்கல் செய்து நிரந்தர உறுத்துக் கட்டளைக்கான பரிகாரமும் பெற்றார்.

1.4) மேற்படி பங்கு தந்தை வாதியின் குடும்பத்திற்கு கொடுத்த தொல்லையால் வாதியின் கணவர் மாரடைப்பால் 07-06-2007 ல் காலமானார். அப்போது வாதி கீழப்புனவாசல் கிராமத்தில் புது வீடு கட்டிக் கொண்டிருந்தார். வாதியின் கணவர் இறந்து இரண்டு வருடம் கழித்து வாதியும் அவரது 2-வது மகளும் கீழப்புனவாசல் கிராமத்தில் உள்ள புது வீட்டில் குடியிருந்தார்கள். வாதியின் கணவர் இறந்தபிறகு வாதி பஞ்சநதீஸ்வர சுவாமி தேவஸ்தானத்திற்குரிய குத்தகை தொகையை செலுத்தி வந்தார். குடிநீர் இணைப்பு வாதியின் கணவர் அருளானந்தம் பெயரிலுள்ளது. வீட்டு வரி வாதி பெயருக்கு 2011-வரை திருவையாறு பேரூராட்சியால் வழங்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் எவ்வித காரணமும் இல்லாமல் திருவையாறு பேரூராட்சி அலுவலர்கள் தாவா சொத்திற்குரிய வீட்டு வரியை வாதியின் பெயரிலிருந்து சட்டவிரோதமாக பிரதிவாதி பெயருக்கு மாற்றிவிட்டார்கள்.

1.5) வாதி, திருவையாறு பேரூராட்சி அலுவலகத்தில் விசாரித்தபோது, அங்கு செயல் அலுவலராக பணியாற்றும் குணசீலன் என்பவர், மதத்தால் ஒரு கிறிஸ்தவர் மற்றும் பிரதிவாதி தேவாலயத்தின் பல உறுப்பினர்களின்

PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.25 19:44:58 +0530

மிகநெருங்கிய உறவினர் ஆவார். அவர் ஒரு சலுகைக்காக, சர்வாதிகார பாணியில் வழக்குச் சொத்தின் மீது பிரதிவாதியின் பெயரில் வீட்டு வரி விதித்துள்ளார் என்பதை அறிந்துகொண்டார். வாதி, பேரூராட்சி அதிகாரிகள் மற்றும் உயர் அதிகாரிகளிடம் பலமுறை கோரிக்கை விடுத்த பிறகு, தனது பெயரில் வீட்டு வரி விதிக்கக்கோரி இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.230/2014–ல் செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்து, விசாரணையில் நிலுவையில் உள்ளது.

1.6) வாதியின் கணவரின் இறப்பிற்கு பிறகு பிரதிவாதியும் தேவாலய உறுப்பினர்களும், வாதி மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களிடம் தங்களது பாகுபாடு நிறைந்த மனப்பான்மையைத் தொடர்ந்தார்கள், வழக்குச் சொத்தை அமைதியாக அனுபவிப்பதில் வாதிக்கும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கும் தொடர்ந்து தொந்தரவு கொடுத்து வந்தனர். பிரதிவாதியும் தேவாலய உறுப்பினர்களும் வாதி மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களை பயமுறித்தி வந்தார்கள். பிரதிவாதி 09.12.2014 அன்று, தேவாலயக் கட்டிடத்துடன் கூடிய வழக்குச் சொத்தை இணைக்கும் முயற்சியில், திருவையாறு கிழக்கு வீதி வழியாக வாதியும் அவரது குடும்பத்தினரும் வழக்குச் சொத்திற்குச் செல்வதை தடுக்கும் வகையில், வழக்கு சொத்தின் முன்பாக ஒரு சுற்றுச்சுவரை எழுப்ப முயன்றார்.

1.7) வாதி உடனடியாக திருவையாறு காவல் நிலையத்தில் புகார் அளித்தார். மேலும் அவர்கள், பிரதிவாதி வழக்கு சொத்தை இணைக்க மேற்கொண்ட சட்டவிரோத முயற்சியைத் தடுத்துள்ளனர். திருவையாறு காவல் துணை கண்காணிப்பாளர், பிரதிவாதி எந்தவித ஆதாரமுமின்றி வழக்குச் சொத்தை இணைக்க மீண்டும் முயற்சித்தால் அவர் மீது குற்றவியல் வழக்கு பதிவு செய்யப்படும் என்றும், அவரது கோரிக்கை

PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.25 19:45:41 +0530

சட்டவிரோதமானது மற்றும் ஏற்கத்தக்கத்தல்ல என்றும் எச்சரித்தார். தற்போது திருவையாறு காவல்துறை அதிகாரிகள், பிரதிவாதிக்கு மறைமுகமாக உதவும் பொருட்டு, அப்பகுதியில் சட்ட ஒழுங்குப் பிரச்சனை அமைதி குலைந்துவிட்டது என்ற தவறான அனுமானத்தில், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 145–ன் கீழ் நடவடிக்கைகளைத் தொடங்குமாறு தஞ்சாவூர் வருவாய் கோட்ட அலுவலரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1.8) உண்மையில் ஏற்கனவே இந்நீதிமன்றத்தால் அ.வ.எண்.70/2006 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு நடைமுறையில் உள்ளது. மேலும், காவல் துறை அதிகாரிகள், வழக்கு சொத்தின் மீதான வாதியின் உடமையில் தலையிட வேண்டாம் என்று பிரதிவாதிக்கு உத்தரவிடுவதற்கு பதிலாக, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 145–ன் கீழ், குற்ற எண்.317/2014, நாள் 11.12.2014–ல் ஒரு முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்துள்ளனர். அது சட்டவிரோதமானது மற்றும் ரத்து செய்யப்பட வேண்டியது ஆகும். பிரதிவாதி, வழக்குச் சொத்திலிருந்து வாதியை வலுக்கட்டாயமாக வெளியேற்றுவதற்காக ரவுடிகளையும், குண்டர்களையும் தொடர்ந்து ஈடுபடுத்தி வருகிறார். பிரதிவாதி சட்டத்தை மதிக்காத குடிமகன் என்றும், இந்நீதிமன்ற தீர்ப்பாணை மூலம் அவர் தடுக்கப்படாவிட்டால், அவர் வாதியை வலுக்கட்டாயமாக வெளியேற்றுவார் என்றும் வாதி அஞ்சுகிறார் என அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2) பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரை சுருக்கம்:</u>

2.1) வாதியின் வழக்கில் 2ம் பிரதிவாதி வெளிப்படையாக ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை வாதி நிரூபிக்க வேண்டிய பொறுப்பில் உள்ளார். வழக்கு சட்டப்படியும் பொருண்மைபடியும்

PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.25 19:46:00 +0530

நிலைநிற்கதக்கதல்ல எடுத்தஎடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டியது. வழக்கானது பொய்யானது, அற்பமானது மற்றும் தொல்லை தரும் உள்நோக்கத்துடன் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்து ஸ்ரீபஞ்சநதீஸ்வரர்சுவாமி கோவில் தேவஸ்தானத்திற்கு சொந்தமானது என்று கூறுவது பொய். மாறாக வழக்கு மனை மட்டுமே அந்த பஞ்சநதீஸ்வரசுவாமி கோவில் தேவஸ்தானத்திற்கு சொந்தமானது. பஞ்சநதம்பிள்ளை என்பவர் வழக்கு சொத்தின் குத்தகைதாரராக இருந்தார் என்பதும், அவர் வழக்கு சொத்தில் ஓலைவீடு கட்டி அந்த மனையை அனுபவித்து வந்தார் என்பதும் உண்மையாகும்.

2.2) மேற்படி பஞ்சநதம்பிள்ளை வழக்கு சொத்தை டாக்டர்.ஞானதுரை என்பவருக்கு உள்குத்தகைக்கு விட்டார் என்றும் கூறுவதும், மேற்படி ஞானதுரை சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு வழக்கு சொத்தை வாதியின் கணவர் அருளானந்தத்திற்கு உள்குத்தகைக்கு விட்டார் என்று கூறுவதும் பொய். மேற்படி பஞ்சநதம்பிள்ளை என்பவர் வழக்கு சொத்தில் அவரால் கட்டப்பட்ட மேற்கட்டுமானத்தை 08.05.1969தேதியிட்ட கிரைய பத்திரம் மூலம் ஞானதுரைக்கு ரூ.1500/-க்கு விற்றார். மேற்கட்டுமானத்தை வாங்கிய பிறகு, ஞானதுரை என்பவர் பஞ்சநதீஸ்வரசுவாமி தேவஸ்தானத்துடன் அந்த இடம் தொடர்பாக ஒரு புதிய குத்தகை ஒப்பந்தம் செய்துகொண்டார். மேலும் அவர் தேவஸ்தானத்திற்கு அடிமனைக்குரிய வாடகையையும் செலுத்தி வந்தார்.

2.3) மேற்படி ஞானதுரை ரோமன் கத்தோலிக்கத்தை சேர்ந்தவர். தாவா சொத்தானது தூய இருதயமேரி தேவாலயத்திற்கு உடன் தெற்கில் உள்ளது. எனவே, மேற்படி ஞானதுரை மேற்கூரையை 2ம் பிரதிவாதி தேவாலயத்திற்கு 30.03.1974 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட தான பத்திரம்

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.25 19:46:13 +0530

மூலம் கொடுத்துவிட்டார். அதுசமயம் 2ம் பிரதிவாதி தேவாலயம் மேற்படி மேற்கூரையை தானமாக பெற்றவுடன் மண்சுவர் மற்றும் ஓலையாலான கூரையை ரூ.3500/- செலவில் ஏற்படுத்தினார்கள். மேற்படி தேவாலயத்தின் பங்குதந்தையாக இருந்த அருள்நாதர் என்பவர் பழைய கட்டுமானங்களை நீக்கி செங்கல்சுவர் அமைத்து மங்களூர் ஓடுகள் கொண்ட கூரையுடன் புதிதாக கட்டிடம் கட்டினார். மேற்படி டாக்டர்.ஞானதுரை அவரது பெயரில் மின் இணைப்பு பெற்றிருந்தார்.

2.4) ஆரம்பத்தில் வழக்கு சொத்தானது தேவாலயத்திற்குரிய நாற்காலி, மேசை மற்றும் இசைக்கருவிகள் ஆகியவற்றை வைத்திருப்பதற்கு பயன்படுத்தி வந்தார்கள். பின்னர், தாவா சொத்து வீடானது தேவாலயத்தில் பணியாளர்கள் (கோவில்பிள்ளை) தங்குவதற்கு கொடுக்கப்பட்டது. வாதியின் கணவர் அருளானந்தம் என்பவர் தேவாலயத்தின் கோவில்பிள்ளையாக வேலை பார்த்தார். எனவே, அவர் பிரதிவாதி தேவாலயத்தில் சேவை செய்ததற்காக தாவா சொத்தில் தங்க அனுமதிக்கப்பட்டார். மேற்படி அருளானந்தம் தாவா சொத்து அடிமனைக்குரிய வாடகையை நேரடியாக பஞ்சநதீஸ்வரசுவாமி கோவிலுக்கு செலுத்தி வந்தார். 2007ம் வருடம் மேற்படி அருளானந்தம் இறந்தபிறகு அவரது மனைவியான வாதி தங்குவதற்கு வேறு இடம் கிடைக்கும் வரை தொடர்ந்து தாவா சொத்தில் குழந்தைகளுடன் தங்குவதற்கு அனுமதிக்கோரினார். எனவே, மனிதாபிமானத்தின் அடிப்படையில் 1 வருடம் தாவா சொத்தில் தொடர்ந்து தங்கிக்கொள்ள அனுமதிக்கப்பட்டார். பின்னர் வாதி தாவா சொத்தான வீட்டை காலிசெய்துவிட்டு புனல்வாசல் கிராமத்திற்கு சென்றுவிட்டார்.

2.5) வழக்குரை 2ம் பத்தியில் கூறியுள்ள சங்கதிகள் பொய்யானவை. தாவா சொத்து வாதியின் கணவர் பெயரில் வரிவிதிப்பு செய்யப்பட்டது

PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.25 19:46:33 +0530

என்பது பொய். மறுபுறம் தாவா சொத்திற்கான வரிவிதிப்பு தேவாலயத்தின் பெயரில் மட்டும் உள்ளது. பங்குதந்தை மற்றும் தேவாலய மற்ற உறுப்பினர்களால் 2004-ம் வருடம் வாதியின் கணவர் கொடுமைப்படுத்தப்பட்டார் என்பது பொய் மற்றும் கற்பனையானது. வழக்குரை 3ம் பத்தியில் கூறியுள்ள சங்கதி பொய்யானது. வாதியின் கணவருக்கு எதிராக தேவாலயம் எந்தவொரு தீர்மானமும் நிறைவேற்றவில்லை. சார்லஸ் தலைமையில் எந்தகுழுவும் அமைக்கவில்லை. மேற்படி சார்லஸ் என்பவருக்கு எதிராக வாதியின் கணவர் தாக்கல் செய்திருந்த வழக்கு பற்றி இந்த பிரதிவாதிக்கு எதுவும் தெரியாது.

2.6) வாதி தொந்தரவு கொடுக்க ஆரம்பித்தபிறகுதான் மேற்படி விவரம் இந்த பிரதிவாதிக்கு தெரியும். வாதியின் கணவர் தாக்கல் செய்த அ.வ.எண்.70/2006-ல் தேவாலய நிர்வாகத்திற்கு எதிராக எந்த குற்றசாட்டும் கூறவில்லை. மேற்படி வழக்கில் 15 ஆண்டுகளுக்கு முன்பிருந்து வாதியின் கணவர் பஞ்சநதீஸ்வரர் தேவஸ்தானத்தின் வாடகைதாரர் என்றும், நேரடியாக ரூ.20,000/- செலுத்தி வந்ததாகவும் கூறியுள்ளார். மேற்படி வழக்கினை சார்லஸ் என்பவருடன் வஞ்சக கூட்டுடன் வாதியின் கணவர் தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது. மேற்படி அ.வ.எண்.70/2006 தீர்ப்பாணையின்படி வாதியின் கணவர் தாவா சொத்தில் எந்த உரிமையும் கோரமுடியாது.

2.7) வழக்குரை 4வது பத்தியில் உள்ளவை முழுவதும் தவறு. வாதி, தனது குழந்தைகளுடன் 2008-ம் ஆண்டில் வழக்கு சொத்தை தேவாலய நிர்வாகத்திடம் ஒப்படைத்துவிட்டு, கீழபுனவாசல் கிராமத்திற்கு குடிபெயர்ந்து 2008 முதல் நிரந்தரமாக வசித்து வருகிறார். வாதி தனது வீட்டுப்

PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.25 19:46:45 +0530

பொருட்களை வழக்கு சொத்தில் வைத்திருப்பதாக கூறுவது பொய். வாதி தாவா வீட்டை காலிசெய்தபிறகு, அது எந்தப் பயன்பாட்டிற்கும் பயன்படுத்தப்படவில்லை. மேலும், பயன்படுத்தப்படாமல் இருந்ததால் அந்த வீடு மிகவும் சேதமடைந்ததுடன், மின்சார விநியோகமும் நீண்டகாலத்திற்கு முன்பே துண்டிக்கப்பட்டுவிட்டது. பழைய மரபெஞ்சுகளும், மேசைகளும் மட்டுமே தேவாலய நிர்வாகத்தால் வழக்குச் சொத்தில் வைக்கப்பட்டுள்ளன.

2.8) தேவாலய நிர்வாகம், வழக்கு சொத்துக்கான சொத்து வரியை 2006–ம் ஆண்டடிலேயே செலுத்தத் தொடங்கியது. மேற்கட்டுமானம் ஒரு பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் மூலம் தேவாலய நிர்வாகத்திற்கு சாதகமாக வழங்கப்பட்டதால், வழக்கு வீடு "மேரி இல்லம்" என்ற தேவாலயம் பெயரில் வரி விதிக்கப்பட்டுள்ளது. வாதி தாவா வீட்டில் வசிக்காததால், அவரிடமிருந்து வீட்டு வரி வசூலிக்கப்படவில்லை. திருவையாறு பேரூராட்சி செயல் அலுவலருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் பொய்யானவை மற்றும் ஆதாரமற்றவை. வாதியால் தாக்கல் செய்யப்பட்ட அ.வ.எண்.230/2014 குறித்து இந்த பிரதிவாதிக்கு எதுவும் தெரியாது. வரி விதிப்பு தேவாலயத்தின் பெயரில் இருக்கும்போது, வாதி இந்த பிரதிவாதியையும் அந்த வழக்கில் ஓர் தரப்பினராக சேர்த்திருக்க வேண்டும்.

2.9) வழக்குரை பத்தி 5–ல் உள்ளவை பொய்யானவை. வாதி 2008–ம் ஆண்டிலேயே வழக்கு சொத்தை காலி செய்துவிட்டதால், வாதி குறிப்பிடும் அனுபவத்தில் அவருக்கு தொந்தரவுகள் கொடுப்பதற்கான கேள்வி எழாது. இந்த பிரதிவாதி வாதிக்கும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கும் கொலை மிரட்டல் விடுத்தார் என்று கூறுவது பொய். பிரதிவாதி சட்டத்தை மதிக்காதவர் என்று வாதி கூறுகிறார், 09.12.2014 அன்று எதுவும் நடக்கவில்லை. வாதி, பங்கு தந்தை மற்றும் கிறிஸ்துவ சமூகத்தை சேர்ந்த

PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.25 19:46:55 +0530

வேறு சில உறுப்பினர்களுக்கு எதிராக ஒரு பொய்யான புகாரை அளித்தார். ஆனால் விசாரணையில் காவல்துறை அதிகாரிகள் அது ஒரு பொய்புகார் மட்டுமே என கண்டறிந்து, இந்த பிரதிவாதிக்கு எதிராக எந்த வழக்கும் பதிவு செய்யவில்லை.

2.10) வழக்குரை பத்தி 6–ல் உள்ள கூற்றுகள் பொய்யானவை. கிறிஸ்தவ சமூகத்தினர் வழிபாட்டுத் தலத்தில் சட்டம் ஒழுங்கு பிரச்சனைகளை உருவாக்கும் நோக்கத்தில், வாதி தேவாலய உறுப்பினர்களுடன் சண்டையிட்டார். வாதியின் நடவடிக்கைகள் சட்ட ஒழுங்கு பிரச்சனைகளை உருவாக்கக்கூடும் என்று திருவையாறு காவல் ஆய்வாளர் கண்டறிந்ததால், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 145ன் கீழ் நடவடிக்கைகளைத் தொடங்குமாறு தஞ்சாவூர் வருவாய் கோட்டாட்சியரிடம் கோரினார். வழக்கு தாக்கல் செய்த தேதியில், வாதி வழக்கு சொத்தின் சுவாதீனத்தில் இல்லை. அ.வ.எண்.70/2006 வழக்கில் கூறப்பட்டுள்ள கூற்றுகளுக்கு எதிராக வாதி கூறியுள்ள முரண்பாடான கூற்று, வாதியின் வழக்கின் பொய்மையை நிரூபிக்கும்.

2.11) வாதி வழக்கு சொத்தில் வசித்து வந்ததாக ஒப்புக்கொண்டபோது உருவாக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் இந்தப் பொய்யான வழக்கை தொடுத்துள்ளார். வாதி கீழப்புனல்வாசல் கிராமத்தின் நிரந்தர குடியிருப்பாளர் ஆவார். அவருக்கு வழக்குச் சொத்தில் எந்த உரிமையும் சுவாதீனமும் இல்லை. உண்மையான உரிமையாளருக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை கோரும் வழக்கு ஏற்புடையதல்ல என்றும் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.25 19:47:30 +0530

3) வாதுரைகள் பார்வையிடப்பட்டு கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.

1. Whether the plaintiff is in possession and enjoyment over the suit property?

2. Whether plaintiff is entitled to the relief of permanent injunction as prayed for?

3. To what relief is plaintiff entitled?

4) சாட்சியங்கள்:

வாதி தனது வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்து அது வா.சா.1 முதல் விசாரணை சாட்சியமாக பதிவு செய்யப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கிற்கு மூன்றாம் நபரும் திருவையாறு பஞ்சநதீஸ்வரர் கோவில் வழக்கு எழுத்தருமான திரு.மகாலிங்கம் வா.சா.2–ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.13 மற்றும் வா.சா.ஆ.14 ஆகியன குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தனது எதிர் வழக்குரையில் கூறப்பட்டுள்ள சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்து அது பி.சா.1 முதல் விசாரணை சாட்சியமாக பதிவு செய்யப்பட்டு பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.14 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கிற்கு 3ம் நபரான திரு.நெல்சன்ராஜ் மற்றும் திரு. சீனுதாசன் இருவரும் முறையே பி.சா.2 மற்றும் பி.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

5) இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு சாட்சியங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.25 19:47:46 +0530

<u>6) **எழு வினாக்கள் 1, 2 மற்றும் 3:**</u>

6.1) தாவா சொத்து என்பது திருவையாறு தாவும் கிழக்குத் தெரு பழைய புல எண்.549/3 பா, புதிய புல எண்.549/3B–ல் உள்ள 0.01.17 ஏர்ஸ் விஸ்தீரணம் உள்ள காலி மனை மற்றும் கதவு எண்.84 கொண்ட மங்களூர் ஓடு வேய்ந்த வீடு ஆகும். தாவா சொத்தின் அடிமனை திருவையாறு ஸ்ரீபஞ்சநதீஸ்வரர் சுவாமி தேவஸ்தானத்திற்கு சொந்தமானது ஆகும். தாவா சொத்தில் வாதி உள் குத்தகைதாரராக வசித்து வருவதாகவும் பிரதிவாதி இடையூறு செய்து வருவதால் அவருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. முதலில் வாதி தாவா சொத்தினை உடைமையில் வைத்து அனுபோகம் செய்து வருகிறார் என்பதை நிரூபணம் செய்ய வேண்டும்.

6.2) வாதி தனது வழக்குரையில் திருவையாறு தாலுக்கா கீழபுனவாசல் கிராமத்தில் வசித்து வருவதாக குறிப்பிட்டுள்ளார். வா.சா.1 முதல் விசாரணை சாட்சி வாக்குமூலத்தில் "**மேற்படி பங்குத்தந்தை எங்கள் குடும்பத்தில் கொடுத்த தொல்லையால் என் கணவர் மாரடைப்பால் 7.6.2007ல் காலமானார். அப்போது நாங்கள் கீழப்புனவாசல் கிராமத்தில் புது வீடு கட்டிக் கொண்டிருந்தோம். என் கணவரை இறந்து இரண்டு வருடம் கழித்து நானும் எனது 2–வது மகளும் கீழப்புனவாசல் கிராமத்தில் உள்ள புது வீட்டில் குடியிருந்தோம். என் மூத்த மகள் ஏஞ்சல்கவிதாராணி அவருடைய கணவருடன் தாவா சொத்தில் உள்ள வீட்டில் கடந்த 2012 வரை குடியிருந்து வந்தார். அதன் பின் அவர் கணவருடன் ஏற்பட்ட மனக்கசப்பு காரணமாக தாவா சொத்தில் உள்ள வீட்டில் எங்கள் வீட்டு உபயோகப் பொருட்களை வைத்து பூட்டி வைத்துள்ளோம்**" என்று குறிப்பிட்டுள்ளார்.

PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.25 19:48:07 +0530

6.3) அதேபோல் வா.சா.1 (வாதி) குறுக்கு விசாரணையில் "**நான் கீழப்புனவாசல் கிராமத்தில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். 2008 ஆம் ஆண்டிலிருந்து அந்த கிராமத்தில் குடியிருந்து வருகிறேன் என்றால் 2007-ஆம் ஆண்டு என் கணவர் இறந்து விட்டார் அதன் பிறகு 2 ஆண்டுகள் கழித்து அந்த கிராமத்தில் வசித்து வருகிறேன்**" என்று சாட்சி அளித்துள்ளார். மேலும் வா.சா.2 குறுக்கு விசாரணையில் "**தாவா சொத்தில் வீடு எதுவும் இல்லை என்றால் சரிதான்.**" என்று சாட்சியளித்துள்ளார். மேற்கண்ட சூழலில் வழக்கு தாக்கல் செய்த காலத்தில் வாதி தாவா சொத்தில் வசித்ததில்லை என்பது புலப்படுகிறது.

6.4) வாதியின் கூற்றுப்படி கடந்த 2009-ஆம் ஆண்டு முதல் வாதி கீழப்புனவாசல் கிராமத்தில் வசித்து வருவதாக ஒப்புக் கொண்டுள்ள போது தாவா சொத்தை வாதி அமைதியான முறையில் அனுபோகம் செய்து வருவதாகவும் அதில் பிரதிவாதி இடையூறு செய்து வருவதாகவும் கூறுவது நம்பும்படியாக இல்லை. ஏற்கனவே வாதியால் தாக்கல் செய்யப்பட்ட அ.வ.எண்.230/2014 என்ற வழக்கு நிலுவையில் இருக்கும் போது அதன் தொடர்ச்சியாக மறு வருடமே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிகிறது.

6.5) வாதிக்கும் திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீஸ்வரர் சுவாமி கோயில் நிர்வாகத்திற்கும் இடையே வாடகைதாரர் நில உரிமையாளர் என்ற ஒப்பந்தம் எதுவும் இல்லை. வாதி மூன்றாவது உள்குத்தகைதாரர் என்று ஒப்புக்கொள்கிறார். சொத்தின் உரிமையாளரின் சம்மதமோ, அனுமதியோ இல்லாத நிலையிலுள்ள உள்குத்தகை செல்லாது. வழக்கு தாக்கல் செய்த காலத்தில் வாதி தாவா சொத்தில் வசித்திருக்காத போது வாதி கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல

PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.25 19:48:43 +0530

என்றும், வாதிக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றும் தீர்வு காண்கிறேன்.

7) **இறுதியாக வாதியின் வழக்கினை செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கிறேன்.**

இத்தீர்ப்புரை என்னால் வாய்மொழியாக சொல்லப்பட்டு கூகுள் டாக்ஸ் உதவியுடன் வரிவடிவம் கொடுக்கப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று (25.06.2026) இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.25 19:48:49 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி திருவையாறு.

1. வாதித்தரப்பு சாட்சிகள்:

1	வா.சா.1	திருமதி.ஜூலியட்
2	வா.சா.2	திரு.மகாலிங்கம்

2. வாதி தரப்பு சான்றாணங்கள்:

1	வா.சா.ஆ.1	19.09.2006 தேதியிட்ட அ.வ.எண்.70/2006-ன் தீர்ப்பாணையின் புகைப்பட நகல்.
2	வா.சா.ஆ.2	19.09.2006 தேதியிட்ட அ.வ.எண்.70/2006-ன் தீர்ப்புரையின் நகல்.
3	வா.சா.ஆ.3	12.12.1996 தேதியிட்ட தொலைபேசி துறையின் கேம்பு அறிவிப்பு அசல்.
4	வா.சா.ஆ.4	08.11.1994 தேதியிட்ட பாரத் எரிவாயு இணைப்புக்கான பதிவு படிவம் அசல்.
5	வா.சா.ஆ.5	2008/2009-ம் ஆண்டுக்கான குடிநீர் இணைப்பு

		அட்டை.
6	வா.சா.ஆ.6	03.03.2014 தேதியிட்ட மின்சார கட்டண ரசீது.
7	வா.சா.ஆ.7	08.05.2008 தேதியிட்ட வாதியின் மகன் ஆரோக்கிய அருள்ராஜ் ஓட்டுநர் உரிமம் புகைப்பட நகல்.
8	வா.சா.ஆ.8	20.02.2006 தேதியிட்ட ஓய்வூதிய பணம் வழங்குவதற்கான வாதியின் பெயரில் உள்ள உத்தரவு புகைப்பட நகல்.
9	வா.சா.ஆ.9	வாதியின் குடும்ப அட்டை புகைப்பட நகல்.
10	வா.சா.ஆ.10	07.01.2015 தேதியிட்ட வருவாய் கோட்டாட்சியர் வாதிக்கு அனுப்பிய அறிவிப்பு.
11	வா.சா.ஆ.11	21.01.2015 தேதியிட்ட வருவாய் கோட்டாட்சியர் வாதிக்கு அனுப்பிய அறிவிப்பு.
12	வா.சா.ஆ.12	அ.வ.எண்.230/2014-ன் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையின் நகல்.
13	வா.சா.ஆ.13	தாவா சொத்தில் கண்டுள்ள புல எண்.549/3B மேற்படி பஞ்சநதீஸ்வரர் சுவாமி கோவிலுக்கு சொந்தமானது சொத்து பதிவேடு சான்றிட்ட நகல்.
14	வா.சா.ஆ.14	திருவையாறு மேற்கு கிராம பட்டா எண்.2-க்குரிய 10(1) சிட்டா சான்றிட்ட நகல்.

3. <u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள்:</u>

1	பி.சா.1	திரு.பிரான்சிஸ்
2	பி.சா.2	திரு.நெல்சன்ராஜ்
3	பி.சா.3	திரு.சீனுதாசன்

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.25 19:48:59 +0530

4) <u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்:</u>

1	பி.சா.ஆ.1	வாதியின் கணவர் தாக்கல் செய்த அ.வ.எண்.70/2006–ன் வழக்குரை நகல்.
2	பி.சா.ஆ.2	30.03.1974 நாளிட்ட திருவையாறு சார்பதிவாளர் அலுவலக செட்டில்மென்ட் ஆவண எண்.344/1974 சான்றிட்ட நகல்.
3	பி.சா.ஆ.3	10.09.2013 நாளிட்ட சொத்து வரி ரசீது அசல்.
4	பி.சா.ஆ.4	20.12.2022 நாளிட்ட சொத்து வரி ரசீது அசல்.
5	பி.சா.ஆ.5	31.03.2016 நாளிட்ட சொத்து வரி ரசீது அசல்.
6	பி.சா.ஆ.6	16.11.2016 நாளிட்ட சொத்து வரி ரசீது அசல்.
7	பி.சா.ஆ.7	18.12.2017 நாளிட்ட சொத்து வரி ரசீது அசல்.
8	பி.சா.ஆ.8	30.03.2019 நாளிட்ட சொத்து வரி ரசீது அசல்.
9	பி.சா.ஆ.9	20.03.2020 நாளிட்ட சொத்து வரி ரசீது அசல்.
10	பி.சா.ஆ.10	11.12.2020 நாளிட்ட சொத்து வரி ரசீது அசல்.
11	பி.சா.ஆ.11	29.09.2021 நாளிட்ட சொத்து வரி ரசீது அசல்.
12	பி.சா.ஆ.12	20.12.2022 நாளிட்ட சொத்து வரி ரசீது அசல்.
13	பி.சா.ஆ.13	14.05.2025 நாளிட்ட நியமன உத்தரவு அசல்.
14	பி.சா.ஆ.14	புகைப்படங்கள்–6, குறுந்தகடு–1, 18.02.2026 நாளிட்ட ரசீது.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.25 19:49:09 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவையாறு.